**Saidai Sa. Duraisamy's**

**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**

*Booklet Series* **A** Register Number

# GROUP – 2A

## HISTORY, GEOGRAPHY, ECONOMY – TAMIL FULL TEST - 1

**[Time Allowed : 2 Hours]** **TEST- 18** **[Maximum Marks: 100]**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the question.
2. This Question Booklet contains 100 questions.
3. Answer **all** questions. **All** Questions carry equal marks.
4. The Test Booklet is printed in **'A'** series booklet, he/she has to indicate in the side 2 of the Answer Sheet with Blue or Black Ink Ball point pen as follows:

| A | [A] | [B] | [C] | [D] |
|---|---|---|---|---|

5. You must write your Register Number in the space provide on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An Answer Sheet will be supplied to you separately by the invigilator to mark the answers. You must write your Name, Register No. and other particulars on side 1 of the Answer Sheet provided, failing which your Answer sheet will not be evaluated.
7. You will also encode your Register Number, Subject Code etc., with Blue or Black Ink Ball Point Pen in the space provided on the side 1 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information. Your Answer Sheet will not be evaluated.
8. Each question comprises *four* response [A], [B], [C] and [D]. You have to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the *Answer Sheet.*
9. In the Answer Sheet there are **four** brackets [A], [B],[C] and [D] against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE bracket of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark it in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. E.g. If for any item, [A] is the correct answer, you have to mark as follows:

   [A] [B] [C] [D]
10. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the invigilator. You are allowed to take the Question Booklet with you one after the Examination is over.
11. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
12. In all matters and in cases of doubt, the English Version is final.
13. Do not tick-mark or mark the answer in the Question Booklet.

**Saidai Sa. Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**

வினாத்தாள் வரிசை **A** பதிவு எண்

**குரூப்- 2A**

**தமிழ் முழு தேர்வு - 1**

**தேர்வு-18**

**[ அனுமதிக்கபட்டுள்ள நேரம்: 2மணி ]** **[ மொத்த மதிப்பெண்கள் : 100]**

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை
4. வினாத் தொகுப்பு **A** என்ற ஒரு வரிசையில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்த பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்ம். உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் **A** என்னும் வினாத் தொகுப்பு பெற்றிறுந்தால் அவர்அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும்.

**A** [A] [B] [C] [D]

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும் வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்: தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில், ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதை கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக் நீங்கள் சரியெனக் கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்கவேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். ஊதாரணமாக நீங்கள் என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்ட வேண்டும்.

[A] [B] [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துக் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பினல் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது

1. **“காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள்” என்று அழைக்கப்பட்டவர் யார்?**
(A) அம்புஜத்தம்மாள் (B) தில்லையாடி வள்ளியம்மை
(C) அஞ்சலையம்மாள் (D) வேலு நாச்சியார்

2. **பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:**

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| (a) சரதம் | 1. நிலா முற்றம் |
| (b) சூளிகை | 2. நாடு |
| (c) மகோததி | 3. வாய்மை |
| (d) அவனி | 4. கடல் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

3. **கீழ்க்காணும் கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காண்பிக்கவும்.**
(A) மிளகு நீரைச் (சாற்றமுது) சாத்தமுது என்பது வைணவ மரபு.
(B) ஆசிரியரை ‘ஐயா’’ என்றே அழைப்பது வேலூர் ஆம்பூர் வட்டத்தார் மரபு
(C) அமிழ்த்தைக் கருப்பஞ்சாறு என்பது சீரங்கம் கோவில் மரவு
(D) திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகளுக்குக் கீற்று வேய்தனைக் கொட்டகை என்பது செட்டிநாடு மரபு.

4. **“முட்டையிட்டது சேவலா பெட்டையா’? - இவ்வினாவில் அமைந்துள்ள வழு எது?**
(A) பால் வழு (B) திணை வழு (C) வினா வழு (D) மரபு வழு

5. **பிறமொழிக் சொல்லற்ற தொடர் எது?**
(A) அவர்களிருவருக்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.
(B) அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது
(C) அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது.
(D) அவர்களிருவருக்கும் இடையே ஸ்பீச் நடந்தது.

6. **மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர்**
(A) வாணிதாசன் (B) திரு.வி. கலியாண சுந்தரனார்
(C) மு. வரதராசன் (D) மருதகாசி

7. **பொருத்துக:**

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| (a) திரிகடுகம் | 1. திருத்தக்கதேவர் |
| (b) முதுமொழிக் காஞ்சி | 2. நல்லாதனார் |
| (c) திருவாரூர் நான்மணிமாலை | 3. மதுரைக் கூடலூர் கிழார் |
| (d) சீவக சிந்தாமணி | 4. குமர குருபரர் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

8. **'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும் அல்லது**
**செய்தல் ஓம்புமின்' - இவ்வடிகள் இடம் பெற்றநூல்**
(A) பதிற்றுப்பத்து (B) பரிபாடல் (C) புறநானூறு (D) குறுந்தொகை

9. **பாரதிதாசன் வெளியிட்ட இதழ்**
(A) தேன் மழை (B) குயில் (C) தென்றல் (D) இந்தியா

10. **ஒற்றுமைக் காப்பியம், என்னும் அடை மொழியால் குறிக்கப்பெறும் நூல்**
(A) பெரியபுராணம் (B) மணிமேகலை
(C) கம்பராமயணம் (D) சிலப்பதிகாரம்

11. **கிருஷ்ணகிரி, கோத்தகிரி - இதில் காணப்படும் 'கிரி' எனும் சொல் கீழ்கண்டவற்றுள் எதைக் குறிக்கிறது?**
(A) கல்லிடைக்குறிச்சி (B) பாறை (C) மலை (D) கோட்டை

12. **'புனையா ஓவியம்" என்பதன் பொருள்**
(A) வண்ணம் தீட்டப்பட்ட ஓவியம்
(B) பூக்களால் வரைவது
(C) மூலிகைகளால் தீட்டப்பட்ட ஓவியம்
(D) கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவது

13. **ஒலி வேறுபாடறிந்து பொருத்துக:**

| | |
|---|---|
| (a) வலை | 1. பொந்து |
| (b) வளை | 2. மீன் வகை |
| (c) வாளை | 3. மரவகை |
| (d) வாழை | 4. மீன்பிடி வகை |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

14. **சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றி – என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?**
(A) புறப்பொருள் வெண்பாமாலை (B) தொல்காப்பியம்
(C) மதுரைக் கலம்பகம் (D) திருவேங்கடந்தாதி

15. **முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை**
(A) ஆசிரியப்பா (B) சிந்துப்பா (C) வஞ்சிப்பா (D) இன்னிசை வெண்பா

16. **அறுகுளத் துகத்து மகல்வயற் பொழிந்தும்**
**உறுமிடத் துவா துவர்நில மூட்டியும் - என்ற பாடலை பாடியவர் யார்?**
(A) கபிலர் (B) பரணர் (C) ஔவையார் (D) வெள்ளிவீதியார்

17. **ஒருமையுள்ள ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**
(A) தொழிலுவமையணி (B) வேற்றுமையணி
(C) எடுத்துக்காட்டுவுமையணி (D) உவமையணி

**18. பண்புப் பெயர்ப்புணர்ச்சி அடையாத சொல்லை தேர்ந்தெடு.**
(A) நற்பயன் (B) பழந்தமிழ் (C) சிறியின் (D) கருத்ததனுள்

**19. "பகடு நடத்த கூழ்"- என்ற பாடல் இடம் பெற்ற நூல்**
(A) நற்றிணை (B) நாலடியார் (C) கலித்தொகை (D) குறுந்தொகை

**20. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக**
(A) மாவட்ட ஆட்சியரால் கொடி ஏற்பட்டது.
(B) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்
(C) ஏற்றினார் கொடியை மாவட்ட ஆட்சியாளர்
(D) மாவட்ட ஆட்சியர் கொடியை ஏற்றுவார்

**21. சிறை என்பதை குறிக்கும் சொல்**
(A) வேலம் (B) வேளம் (C) வேழம் (D) வோலம்

**22. கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?**
1. கம்பராமாயணத்தில் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம்
2. இரணியன் வதைப்படலம் வான்மீக இராமாயணத்தில் இடம் பெறவில்லை
3. மாயாசனகப் படலம் கம்பராமாயணத்தில் இல்லாதது
4. கம்பார் நூறு பாடல்களுக்கு ஒரு முறை தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் போற்றி உள்ளார்.

(A) 1, 2 சரியானவை (B) 2, 3 சரியானவை
(C) 3, 4 சரியானவை (D) 1, 4 சரியானவை

**23. கீழே காணப்பெறுவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க**
(A) சமரச சன்மார்க்கம் எனும் விரிந்த நோக்கினைக் கொண்டவர் தாயுமானவர்
(B) தமிழ் மொழியின் உபநிடம் என்று போற்றப்படுவது தாயுமானவரது பாடல் ஆகும்.
(C) ஆன்மநேய ஒருமைப்பாட்டை வள்ளலாரிடம் இருந்து கற்றறிந்தவர் தாயுமானவர்.
(D) பராபரக் கண்ணிகள் தாயுமானவரால் இயற்றப்பட்டவை.

**24. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:**

| **பட்டியல் ஒன்று (அகநானூற்றின் பாட்டுவைப்புமுறை)** | **பட்டியல் இரண்டு (திணை)** |
|---|---|
| (a) 10, 20, 30, 40 ....... | 1. முல்லைத் திணை |
| (b) 6, 16, 26, 36 ....... | 2. நெய்தல் திணை |
| (c) 4, 14, 24, 34 ....... | 3. குறிஞ்சித் திணை |
| (d) 2, 8, 12, 18 ....... | 4. மருத் திணை |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

**25. திருவிளையாடல் புராணம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?**
1. மதுரையில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக்கடவுள் செய்த அறுபத்துமூன்று திருவிளையாடல்களை விளக்கிக்கூறும் பழைய வரலாற்று நூல் திருவிளையாடல் புராணம்.

2. திருவிளையாடல் புராணத்தைப் பாடிய பரஞ்சோதி முனிவர் வடமொழியையும், தமிழையும் நன்கு கற்றுணர்ந்த சான்றோர்.
3. திருவிளையாடல் புராணம், மதுரைக்காண்டம், கூடல் காண்டம், திருவாலவாய் காண்டம் என்னும் மூன்று பிரிவுகள் கொண்டது.
4. திருவிளையாடல் புராணத்தில் அறுபத்தைந்து படலங்களும் மூவாயிரத்து இருநூறு பாடல்களும் உள்ளன

(A) 1 மற்றும் 3 சரியானவை
(B) 2 மற்றும் 3 சரியானவை
(C) 3 மற்றும் 4 சரியானவை
(D) 1 மற்றும் 4 சரியானவை

**26. அகரவரிசைப்படி சரியான அமைந்த சொல் வரிசையைக் குறிப்பிடுக.**
(A) அமிர்தம், அமிழ்து, அமிழ்தம், அமிழ்தல்
(B) ஈரம், ஈரல், ஈருயிர், ஈகை
(C) கண், கண்டம், கண்டு, கண்ணி
(D) தகடு, தகழி, தகவு, தகர்

**27. 'இன்மையுள் இன்மை விருந்தொரால்' - இதில் விருந்து என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.**
(A) பண்புப்பெயர்
(B) வினையாலணையும் பெயர்
(C) பண்பாகு பெயர்
(D) வியங்கோள் வினைமுற்ற

**28. கீழே தரப்பெறுவனவற்றுள் சரியானவை எவை?**
1. நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்
2. நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்
3. வேற்றுமை உருபேற்கும் போது, 'யான்' என்பது 'என்' என்றும், 'யாம்' என்பது 'எம்' என்றும், 'நாம்' என்பது 'நம்' என்றும் திரியும்.
4. நீ, நீர், நீவிர்," நீயிர், நீங்கள் என்பன முன்னிலை ஒருமைப் பெயர் ஆகும்.

(A) 1, 3 மற்றும் 4 சரியானவை
(B) 1, 2 மற்றும் 3 சரியானவை
(C) 2, 4 மற்றும் 1 சரியானவை
(D) 4, 3 மற்றும் 1 சரியானவை

**29. மு. மேத்தா எழுதிய சாகித்திய அகாடமி பரிசு பெற்ற நூல் எது?**
(A) தமிழிலக்கிய வரலாறு
(B) தமிழின்பம்
(C) கள்ளர் சரித்தரம்
(D) ஆகாயத்து அடுத்த வீடு

**30. பொருட்டன்று – பிரித்து எழுதுக**
(A) பொருட்டு + அன்னு
(B) பொரு + அன்று
(C) பொருட்டு + அன்று
(D) பொருட் + டன்று

**31. "இருட்டறயில் உள்ளதடா உலகம்" – எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?**
(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) கவிமணி (D) நாமக்கல் கவிஞர்

**32. நாலாயிரத்திவ்விய பிரபந்தம் எத்தனை பிரிவுகளை கொண்டது?**
(A) இரண்டு (B) நான்கு (C) ஆறு (D) எட்டு

**33. "ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம் உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது" – என்று கூறியவர்**
(A) பெரியார் (B) காமராஜர் (C) அம்பேத்கார் (D) அண்ணா

**34. பொருந்தாதச் சொல்லைக் கண்டறி**
**இந்து, திங்கள், மதி, தண்சுடர், ஞாயிறு**
(A) இந்து (B) மதி (C) ஞாயிறு (D) திங்கள்

**35. பொருத்துக**

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| (a) பழமொழி | 1. மூவாதியார் |
| (b) சிறுபஞ்சமூலம் | 2. பொறையனார் |
| (c) ஐந்திணை ஐம்பது | 3. காரியாசான் |
| (d) ஐந்திணை எழுபது | 4. முன்னுறையரையானார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**36. மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்றிக் கருதி போரிடல்?**
(A) காஞ்சி திணை (B) வாகைத் திணை
(C) வஞ்சித் திணை (D) நொச்சி திணை

**37. வேர்ச்சொல்லை கண்டறிக: வாடினான்**
(A) வாட்டு (B) வாட்டுதல் (C)வாட்டி (D) வாடு

**38. பொருத்துக**

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| (a) அடி அகரம் ஐ ஆதல் | 1. வெற்றிலை |
| (b) ஆதி நிடல் | 2. கரும்பலகை |
| (c) இனமிகல் | 3. பைங்கூழ் |
| (d) தன்னொற்றிரட்டல் | 4. மூதூர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

**39. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரனோடு எந்த பூவைச் சூடிப் போரிடுவார்?**
(A) கரந்தைத் திணை (B) வெட்சித் திணை
(C) நொச்சித் திணை (D) காஞ்சித் திணை

**40. "திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மொழியார்க்கோ உரியதன்று அது மண்பதைக்கு – உலக்கு உரியது, என்று கூறியவர் யார்?**
(A) கி.ஆ.பெ. விசுவநாதன் (B) மு.வ (C) திரு.வி.க. (D) பெரியார்

**41. இலக்கணக் குறிப்பறிக.**
(A) பண்புத் தொகை
(B) இருபெயரொட்டு பண்புத்தொகை
(C) பண்புத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை
(D) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

**42. சகாத்திய அகாடெமி பரிசு பெற்ற ரா.பி. சேதுப்பிள்ளியின் நூல் எது?**

(A) கள்ளர் சரித்திரம் (B) தமிழ் இலக்கிய வரலாறு
(C) தமிழன்பம் (D) முத்தொள்ளாயிர விளக்கம்

**43. பாந்தன், உரகம், பன்னகம், பணி என்றும் சொற்களின் பொருள் __________ என்பதாகும்.**

(A) கரடி (B) யானை (C) முதலை (D) பாம்பு

**44. 'முத்தொள்ளாயிரம்' பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைச் சுட்டுக.**

(A) முத்தொள்ளயிரப் பாடல்களில் 'புறத்திரட்டு' என்னும் நூலின் வாயிலாக 108 வெண்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
(B) பழைய உரைநூல்களில் மேற்கோளாக 22 பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.
(C) பழந்தமிழர் பண்பாடு, தமிழக மூவேந்தர்கள், அவர்தம் படைகள், வீரர்கள், போரியல் முறைகள் சொல்லப்பட்டார்.
(D) சுவை மிகுந்த விருத்தப்பாக்கள் கற்பனைக் களஞ்சியமாகத் திகழந்தன

**45. 'திரிகடுகம்" பற்றிய கூற்றுகளில் பொருந்தாதவற்றை குறிப்பிடுக்**

(A) திரிகடும் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது.
(B) திரிகடுத்தின் ஆசிரியர் நல்லாதனார்
(C) திரிகடுகம் பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களுகள் ஒன்று
(D) சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துப் பெயர் திரிகடுகம்.

**46. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் பாடப்பட்ட மன்னன்**

(A) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
(B) பல்யானை செல்கெழுகுட்டுவன்
(C) செல்வக்கடுங்கோ வாழியாதன்
(D) கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்

**47. இந்தியா, விஜயா என்று இதழ்களை வெளியிட்டவர்**

(A) பாரதிதாசன் (B) பாரதியார் (C) திரு.வி.க (D) முடியரசன்

**48. தமிழார்வத்தின் காரணமாகத் தம் பெயரை 'பரிதிமாற் கலைஞர்' என மாற்றி அமைத்துக் கொண்டவர்.**

(A) மறைமலையடிகள் (B) சூரிய நாராயண சாஸ்திரி
(C) ரா. இராகவையங்கார் (D) சிங்கார வேலு முதலியார்

**49. பொருத்துக**

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| (a) விரிநகர் | 1. பண்புத்தொகை |
| (b) மலரடி | 2. வினைத்தொகை |
| (c) மா பலா வாழை | 3. உவமைத்தொகை |
| (d) முதுமரம் | 4. உம்மைத்தொகை |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**50. “மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர், புதுக் கவிதையில் மலர் பார்த்தவர்**
(A) முடியரசன் (B) வாணிதாசன் (C) சுரதா (D) அப்துல் ரகுமான்

**51. “தமிழ் - பிரெஞ்சு கையகர முதலி” என்ற நூலை வெளியிட்ட கவிஞர்**
(A) கண்ணதாசன் (B) வாணிதாசன் (C) பாரதிதாசன் (D) முடியரசன்

**52. “கூவா முன்னம் இளையோன் குறுகிநீ”**
**கொடுக்கப்பட்டுள்ள செய்யுளில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு பொருத்தமான இலக்கணக்குறிப்பைக் கண்டறிக.**
(A) பெயரெச்சம், வினையெச்சம்
(B) பண்புத் தொகை, பெயரெச்சம்
(C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம்
(D) வினைமுற்று, வினையெச்சம்

**53. தவறான மரபுச் சொல்லைத் தேர்க**
(A) மாம் பிஞ்சு - மாவடு
(B) இளந் தேங்காய் - வழுக்கை
(C) வாழைப் பிஞ்சு – வாழைக்கச்சல்
(D) முருங்கைப் பிஞ்சு – முருங்கை மொட்டு

**54. ‘நாரதர் வருகிறார்’ என்ற தொடர் என்ன ஆகுபெயர்?**
(A) காரியவாகு பெயர் (B) கருத்தாவாகு பெயர்
(C) கருவியாகு பெயர் (D) உவமையாகு பெயர்

**55. திருக்குறள் - பொருட்பாலின் இயல்**
(A) பாயிரவியல், துறவறவியல், ஒழிபியல்
(B) அரசியல், அங்கவியல், ஒழிபியல்
(C) அரசியல், இல்லறவியல், களவியல்
(D) பாயிரவியல், அங்கவியல், கற்பியல்

**56. தமிழ்ப் பெயர்களைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை?**
1. ஒருவர், ஒரு இடம், பொருள் பற்றிக் குறிப்பதற்குக் குறியீடாக இடுவது பெயர்.
2. தமிழல் பெயாச் சொற்கள் ஒரு போதும் காலம் காட்டி
3. தமிழ் பெயர்ச்சொற்கள் அனைத்தும் காரணம் பற்றி அமைவன
4. குழந்தை என்னும் தமிழ்ப்பெயர் பால் பகாப் பெயர்ச்சொல் ஆகும்.

(A) 4, 3 மற்றும் 1 சரியானவை (B) 2, 3 மற்றும் 4 சரியானவை
(C) 1, 2 மற்றும் 4 சரியானவை (D) 3, 1 மற்றும் 2 சரியானவை

**57. கீழே காணப் பெறுவனவற்றுள் எக்கூற்றுகள் சரியானவை?**
1. ந. வேங்கட கிருஷ்ணன் என்னும் இயற்பெயரைக் கொண்ட ந.பிச்சமூர்த்தியின் சிறந்த கவிதை நூல், ந.பிச்சமூர்த்தியின் கவிதைகள் என்பது.
2. கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள் ஒரங்நாடகங்கள், ஆகியவற்றை ந.பிச்சமூர்த்தி எழுதியுள்ளார்.
3. திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் எண்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இயற்றியுள்ளார்.
4. தமிழத்தாத்தா என்று அழைக்கப்பட்ட உ.வே. சாமிநாதரின் தலை மாணவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.

(A) 1, 4 சரியானவை (B) 2, 3 சரியானவை
(C) 3, 4 சரியானவை (D) 1இ 2 சரியானவை

**58. விடைத் தேர்க: மதுரைக் காஞ்சியின் சிறப்புகளைத் தேர்க**
1. மதுரையைக் பாடுவது
2. நிலையமையைக் கூறுவது
3. பத்துபாட்டுள் மிகுதியான அடிகளை உடையது

(A) 2, 3 சரி 1 தவறு
(B) 1, 2 மற்றும் 3 சரியானவை
(C) 1, 2 சரி 3 தவறு
(D) 1, 3 சரி 2 தவறு

**59. கீழ்க்காணும் நூல்களுன் இலக்கண நூல் அல்லாதது எது?**
(A) தொல்காப்பியம்
(B) தேம்பாவணி
(C) தண்டியலங்காரம்
(D) வீரசோழியர்

**60. பொருந்தாத விடையைக் குறிப்பிடுக**
(A) மனுமுறை கண்ட வாசகம்
(B) திருப்புகழ்
(C) திருவருட்பா
(D) ஜீவகாருண்ய ஒழுக்கம்

**61. குறுந்தொகியன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர்**
(A) பாரதம் பாடிய பெருந்தேவனார்
(B) பெருங்குன்றூர்க் கிழார்
(C) பொருந்தில் இளங்கீரனார்
(D) காக்கைப் பாடினியார்

**62. "கிறித்தவக் கம்பர்" எனப் புகழைப் பெறுபவர்**
(A) வீரமாமுனிவர்
(B) ஜி.யு.போப்
(C) ஹென்றி ஆல்பாட்டு கிருட்டினணார்
(D) எல்லீஸ்

**63. உரிய சொல்லால் நிரப்புக**
**அறனறிந்து மூத்த அறிவுடையார் ________________ திறனறிந்து தேர்ந்து கொளஎல்.**
(A) கேண்மை (B) நன்மை (C) வன்மை (D) தகைமை

**64. கீழ்க்காணும் திருக்குறளைத் தக்க மேற்கோள் தொடரால் நிரப்புக.**
**"ஊழி பெயரினும் தாம் பெயரார் __________________"**
(A) சால்பென்னும் திண்மை உண்டாகப் பெறின
(B) தோல்வி துலையல்லார் கண்ணும் கொளஎல்
(C) பிறர் தீமை சொல்லா நலத்து சால்பு
(D) சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்

**65. குமரகுருபரரின் நூல் பட்டியலில் பொருந்தாத நூல்**
(A) மதுரைக் கலம்பகம்
(B) நந்திக் கலம்பகம்
(C) கந்தர் கலிவெண்பா
(D) நீதிநெறி விளக்கம்

**66. கீழுள்ள பட்டியலில் பொருந்தாத நாடகம்**
(A) சந்திரோதயம் (B) ஓர் இரவு (C) தூக்குமேடை (D) வேலைக்காரி

**67. கீழ்க்காண்பவனவற்று பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.**
(A) 'பொல்லாக் காட்சி' என்பதன் பொருள், 'மாயத்தோற்றம்" என்பது
(B) வெகுளல் என்பதன் பொருள், "சினத்தல்" என்பது
(C) பெ.:.கல் என்பதன் பொருள், "விரும்புதல்" என்பது
(D) "குறளை" என்பதன் பொருள், "புறம் பேசுதல்" என்பது

**68. ‘அழுது அடியடைந்த அன்பர்’ எனக் குறிப்பிடப் பெறுபவர்**
(A) சுந்தரமூர்த்தி (B) மாணிக்கவாசகர்
(C) திருஞானசம்பந்தர் (D) திருநாவுக்கரசர்

**69. பிரித்தெழுதுக: நாத்தொலைவில்லை**
(A) நா + தொலைவில்லை (B) நாத்தொலைவு + இல்லை
(C) நா + தொலைவு + இல்லை (D) நா + தொலைவு + இல்லை

**70. அதியமான நெடுமாஞ்சியின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்**
(A) வெள்ளிவீதியார் (B) ஔவையார்
(C) காக்கை பாடினியார் (D) நக்கண்ணையார்

**71. பொருந்தா இணையைக் கண்டறிக:**
(A) பரவை – கடல் (B) கரி – நரி (C) பரி – குதிரை (D) கணை – அம்பு

**72. ஏழ் பருவ மங்கையரைப் பற்றிக் கூறும் இலக்கியம் எது?**
(A) தூது (B) உலா (C) பள்ளு (D) அந்தாதி

**73. ‘ஞான சாகரம்’ - இதழினை ‘அறிவுக்கடல்’ என மாற்றியவர்.**
(A) பரிதிமாற் கலைஞர் (B) மறைமலையடிகள்
(C) இரா.பி. சேதுப்பிள்ளை (D) திரு.வி.க

**74. “திவ்விய கவி” – என்றழைக்கப்படுவர் யார்?**
(A) குலசேகர ஆழ்வார் (B) ஆண்டாள்
(C) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் (D) பெரியாழ்வார்

**75. “நாளை என் தமிழ் மொழி சாகுமானால் - இன்றே நான் இறந்து விடுவேன்” என்று கூறியவர்.**
(A) காந்தியக் கவிஞர் இராமலிங்கர் (B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
(C) ருசியக் கவிஞர் ரசூல் கம்சதேவ் (D) ருசிய அறிஞர் தால்சுதாய்

**76. பொருட்பாலில் பகுக்கப் பெறாத இயல்**
(A) பாயிரவியல் (B) அரசியல் (C) அங்கவியல் (D) ஒழியியல்

**77. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:**

| **பட்டியல் ஒன்று (ஊர்)** | **பட்டியல் இரண்டு (சிறப்புப்பெயர்)** |
|---|---|
| (a) சிதம்பரம் | 1. திருமறைக்காடு |
| (b) வேதாரண்யம் | 2. திருச்சிற்றம்பலம் |
| (c) விருதாச்சலம் | 3. திருப்பாதரிப்புலியூர் |
| (d) கடலூர் | 4. திருமுதுகுன்றம் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**78. ‘ஆற்றுணா வேண்டுவ(து) இல்’ - இப்பழமொழியல் உள்ள ‘ஆற்றுணா’ என்பதன் பொருள்**
(A) அரையன் (B) வழிநடை உணவு (C) அரண்மனை (D) திருவிழா

**79. ‘எனக்கு மிக விருப்பமான இலக்கியம்’ – கலிங்கத்துப்பரணியே - இப்படிப் கூறியவர்**
(A) திரு.வி.க (B) பெரியார் (C) அண்ணாதுரை (D) மு.வ.

**80. தமிழ்நாட:க் குடைவரைக் கோயில்களுள் மிகவும் பழமையான கோயில் உள்ள ஊர்.**
(A) சுவாமி மலை (B) பிள்ளையார்பட்டி
(C) திருப்பரங்குன்றம் (D) பழனி

**81. இலக்கணக்குறிப்பு தருக. ‘கொன்ற’**
(A) வினையெச்சம் (B) பெயரெச்சம்
(C) எதிர்கால வினையெச்சம் (D) வினைமுற்று

**82. “சாதனைப் பூக்களை ஏந்து முன்னே -இங்கு நல்ல செடி இளைப்பாறிடுமோ?” இது யாருடைய கூற்று?**
(A) சாலை இளந்திரையன் (B) பாரதிதாசன்
(C) தாரா பாரதி (D) கவிஞர் சுரதா

**83. “எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே” எனக் கூறியவர்.**
(A) தொ.பொ. மீனாட்சி சுந்தரனார் (B) டாக்டர். அப்பாதுரையார்
(C) பேரறிஞர் அண்ணா (D) டாக்டர் மு.வ.

**84. ‘பைந்தமிழ் ஆசான்’ – எனப் போற்றப்படுபவர் யார்?**
(A) கா.நமச்சிவாயனார் (B) வள்ளலார் (C) அண்ணாதுரை (D) கண்ணதாசன்

**85. ‘இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்’ – என்ற நூலை இயற்றியவர்**
(A) பெரியார் (B) அண்ணா (C) பாரதிதாசன் (D) டாக்டர் அம்பேத்கார்

**86. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.**
**நேற்று எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது.**
(A) வினாவாக்கியம் (B) செய்திவாக்கியம்
(C) பிறவினை வாக்கியம் (D) உணர்ச்சி வாக்கியம்

**87. ஈற்றயலடி மூச்சீராக: ஏனைய அடிகள் நாற்சீராக – அமையும் பாவகை – பின்வருவனவற்றுள் எது?**
(A) நேரிசை ஆசிரியப்பா (B) நிலைமண்டில ஆசிரியப்பா
(C) அடிமறி மண்டில் ஆசிரியப்பா (D) இணை குறளாசிரியப்பா

**88. பொருத்துக:**

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| (a) விந்தன் | 1. குருதிப்புனல் |
| (b) க. சமுத்திரம் | 2. பெற்ற மணம் |
| (c) இந்திரா பார்த்தசாரதி | 3. சோற்றுப்பட்டாளம் |
| (d) மு.வ. | 4. பாலும் பாவையும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**89. ‘என்றுமுள தென்தமிழ்’ – என்னும் தொடரை இயம்பியவர் யார்?**
(A) கம்பர் (B) பாரதியார் (C) பாரதிதாசன் (D) வள்ளலார்

**90. தொடரை நூலுடன் பொருத்துக**

| தொடர்கள் | நூல்கள் |
|---|---|
| (a) ஆற்றுணா வேண்டுவது இல் | 1. நாலடியார் |
| (b) நாய்கால் சிறுவிரல் போல் | 2. திருக்குறள் |
| (c) மணக்கு விளக்கம் மடவாள் | 3. பழமொழி |
| (d) அன்பின் வழியது உயர்நிலை | 4. நாண்மணிக்கடிகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**91. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.**
(A) பலாமூசு (B) முற்றிய தேங்காய்
(C) அவரைப்பிஞ்சு (D) முருங்கைப் பிஞ்சு

**92. ‘மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே’ மன்னன் வாயில் தெறித்த மணி எது?**
(A) முத்து (B) பவளம் மாணிக்கம் (D) கோமேதகம்

**93. பொருத்துக**

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| (a) புதுக்கவிதையின் மறுபிறப்புக்கு வித்திட்டவர் | 1. சுந்தர ராமசாமி |
| (b) புதுக்கவிதை செழுமையுறக் காரணமாக இருந்தவர் | 2. மணி |
| (c) புதுக்கவிதை வரலாற்றில் ஒரு துரவ நட்சத்திரம் | 3. அ.ந. பிச்சமூர்த்தி |
| (d) யாப்பறிந்து யாப்புடைத்த புதுக்கவிஞர் | 4. சி.சு. செல்லப்பா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**94. கீழ்க்காணும் விடைகளில் எது சரியானது?**
(A) ஈ - கொடு (B) ஆ – எருது (C) கோ – கோபுரம் (D) சே – செய்

**95. பொருத்துக:**

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| (a) மூவருலா | 1. கம்பர் |
| (b) கலிங்கத்துப்பரணி | 2. ஒட்டக்கூத்தர் |
| (c) சிலைஎழுபது | 3. புகழேந்தி |
| (d) நளவெண்பா | 4. செயங்கொண்டார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**96. பொருத்துக**

| சொல் | பொருள் |
|---|---|
| (a) மிடிமை | 1. திருமணம் |
| (b) உரவு | 2. வயது |
| (c) வதுவை | 3. வறுமை |
| (d) அகவை | 4. வலிமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**97. ________________ என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது.**

(A) சீதக்காதி வள்ளல் (B) சடையப்ப வள்ளல்
(C) அபுல் காசிம் (D) சந்திரன் சுவர்க்கி

**98. இவர்களுள் ஒருவர் இலங்கையில் பிறந்த தமிழ்கவிஞர்**

(A) தரு.மு. சிவராமு (B) சி. மணி (C) பசுவய்யா (D) தேவதேவன்

**99. காரியாசன் ________________ ஒரு சாலை மாணாக்கராவர்**

(A) மதுரைக் கூடலூர் கீழார் (B) கணிமேதாவியார்
(C) நல்லாதனார் (D) திருவள்ளுவர்

**100. பொருத்துக**

| சிறப்புத்தொடர் | நூல்கள் |
|---|---|
| (a) தமிழ் வேலி | 1. தேவாரம் |
| (b) தமிழ் செழுகூடல் | 2. திருவாசகம் |
| (c) கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் | 3. பரிபாடல் |
| (d) பண்ணாடு தமிழாப்பாய் | 4. புறநானூறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

Saidai Sa. Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)
A-Block Old No.A9 New No. A 41, 6th Street,
Anna Nagar East, Chennai – 600 102
E Mail Address : anmanidhanaeyam@gmail.com
Website : saidais.com

# TNPSC GROUP – 2A – TEST – 18
# (ANSWER KEY)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. A | 21. B | 41. D | 61. A | 81. B |
| 2. A | 22. A | 42. C | 62. C | 82. A |
| 3. C | 23. C | 43. D | 63. A | 83. C |
| 4. C | 24. D | 44. D | 64. D | 84. A |
| 5. C | 25. B | 45. A | 65. B | 85. D |
| 6. B | 26. C | 46. D | 66. C | 86. B |
| 7. C | 27. C | 47. B | 67. D | 87. A |
| 8. C | 28. B | 48. B | 68. B | 88. A |
| 9. B | 29. D | 49. B | 69. D | 89. A |
| 10. D | 30. C | 50. D | 70. B | 90. B |
| 11. C | 31. B | 51. B | 71. B | 91. A |
| 12. D | 32. B | 52. C | 72. B | 92. C |
| 13. C | 33. C | 53. D | 73. B | 93. C |
| 14. B | 34. C | 54. D | 74. C | 94. A |
| 15. B | 35. A | 55. B | 75. C | 95. B |
| 16. B | 36. C | 56. A | 76. A | 96. C |
| 17. D | 37. D | 57. A | 77. D | 97. C |
| 18. D | 38. C | 58. B | 78. B | 98. A |
| 19. B | 39. D | 59. B | 79. C | 99. B |
| 20. B | 40. C | 60. B | 80. B | 100. D |